# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2456/33 - 2025 සැප්තැම්බර් මස 30 වැනි අඟහරුවාදා - 2025.09.30**

2456/33 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

தொடர்பு இல.: கடு/காணி/01/144/WS.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் கடுவல பிரதேச செயலாளர் பிரிவில் 474/ஏ, ரக்கஹவத்த கிராம அலுவலர் பிரிவில் ரக்கஹவத்த கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட நி.வ. 522011 மற்றும் 2025.06.18 ஆந் திகதிய திட்டப்படத்தில் வலயம் 1, பத்திர இலக்கம் 01 இல் துண்டு இலக்கம் 01 எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: திசாவத்த அல்லது கடுகம் பலயாஓவிட, கொடெல்லவத்த, ரக்கஹவத்த அல்லது திபிரிகஹவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தர மான கட்டிடமொன்று மற்றும் தற்காலிக கட்டிடம் ஒன்றின் ஒரு பகுதி காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திரு. மஞ்சுல பலிஹேன, திரு. பீ. டி. நாலக பலிஹேன, திருமதி ஷதமலி பலிஹேன; விஸ்தீரணம்: 0.5514 ஹெக்டயார்

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம்

அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு சீதாவக பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். எஸ். சம்பத் இடம்கொடகே,
பிரதேச செயலாளர்,
கடுவெல.

பிரதேச செயலகம்,
கடுவெல,
2025, செத்தெம்பர் 30.

EOG 09 - 0270

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DIVPP/LAND/LA/ACQUI/3-2/ 334/15.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/10/2019/MV/465-I

2022.11.02 ஆந் திகதிய 2304/42 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எடுத்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் விளக்கம் 23A பக்கத்தில் தமிழ் மொழியில் பதிவிடப்பட்ட அறிவித்தலில் துண்டு இலக்கம் 228 இன் காணியின் விஸ்தீரணம் "0.0211" ஹெக்டயார் என்று பதியப் பட்டுள்ளதுடன் அதனுடைய விஸ்தீரணம் "0.1804" ஹெக்டயார் என சரியானதாக பதியப்பட வேண்டும் என்று இதன் மூலம் அறிவிக்கிறேன்.

டி. எம். எஸ். தஸநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்பித்திகம.

பிரதேச செயலகம்,
பொல்பித்திகம,
2025, செத்தெம்பர் 16.

EOG 09 - 0273

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.